ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ இருந்தண் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ இருந்தண் ॥

திருவயிந்திரபுரம்

‡இருந்தண் மா நிலம் ஏனம் அதாய்⋆ வளை
மருப்பினில் அகத்தொடுக்கி⋆
கருந்தண் மா கடல் கண் துயின்றவன் இடம்⋆
கமல நல் மலர்த்தேறல்
அருந்தி⋆ இன் இசை முரன்றெழும் அளிகுலம்
பொதுளி⋆ அம் பொழிலூடே⋆
செருந்தி நாண்மலர் சென்றணைந்துழிதரு⋆
திருவயிந்திர புரமே (1)

மின்னும் ஆழி அங்கையவன்⋆ செய்யவள்
உறை தரு திரு மார்பன்⋆
பன்னு நால் மறைப் பல பொருள் ஆகிய⋆
பரன் இடம் வரைச் சாரல்⋆
பின்னும் மாதவிப் பந்தலில் பெடை வரப்⋆
பிணி அவிழ் கமலத்து⋆
தென்னவென்று வண்டின் இசை முரல் தரு⋆
திருவயிந்திர புரமே (2)

‡வையம் ஏழும் உண்டு⋆ ஆலிலை வைகிய
மாயவன்⋆ அடியவர்க்கு
மெய்யன் ஆகிய தெய்வ நாயகன் இடம்⋆
மெய் தகு வரைச் சாரல்⋆
மொய் கொள் மாதவி சண்பகம் முயங்கிய⋆
முல்லை அம் கொடி ஆட⋆
செய்ய தாமரைச் செழும் பணை திகழ் தரு⋆
திருவயிந்திர புரமே (3)

www.prapatti.com

மாறு கொண்டுடன்றெதிர்ந்த வல் அவுணன் தன்⋆
 மார்பகம் இரு பிளவாக்⋆
கூறு கொண்டவன் குலமகற்கு⋆ இன் அருள்
 கொடுத்தவன் இடம்⋆ மிடைந்து
சாறு கொண்ட மென் கரும்பிளங்கழை தகை⋆
 விசும்புற மணி நீழல்⋆
சேறு கொண்ட தண் பழனம் அதெழில் திகழ்⋆
 திருவயிந்திர புரமே (4)

ஆங்கு மாவலி வேள்வியில் இரந்து சென்று⋆
 அகல் இடம் அளந்து⋆ ஆயர்
பூங்கொடிக்கின விடை பொருதவன் இடம்⋆
 பொன் மலர் திகழ்⋆ வேங்கை
கோங்கு செண்பகக் கொம்பினில்⋆ குதி கொடு
 குரக்கினம் இரைத்தோடி⋆
தேன் கலந்த தண் பலங்கனி நுகர் தரு⋆
 திருவயிந்திர புரமே (5)

கூன் உலாவிய மடந்தை தன் கொடுஞ்சொலின்
 திறத்து⋆ இளங்கொடியோடும்⋆
கான் உலாவிய கரு முகில் திரு நிறத்தவன்
 இடம்⋆ கவின் ஆரும்⋆
வான் உலாவிய மதி தவழ் மால் வரை⋆
 மா மதிள் புடை சூழ⋆
தேன் உலாவிய செழும் பொழில் தழுவிய⋆
 திருவயிந்திர புரமே (6)

மின்னின் நுண் இடை மடக்கொடி காரணம்⋆
 விலங்கலின்மிசை இலங்கை
மன்னன்⋆ நீள் முடி பொடிசெய்த மைந்தன-
 திடம்⋆ மணி வரை நீழல்⋆
அன்ன மாமலர் அரவிந்தத்தமளியில்⋆
 பெடையொடும் இனிதமர⋆



www.prapatti.com

செந்நெலார் கவரிக் குலைவீசு⋆ தண்
    திருவயிந்திர புரமே (7)

விரை கமழ்ந்த மென் கருங்குழல் காரணம்⋆
    வில்லிறுத்து⋆ அடல் மழைக்கு
நிரை கலங்கிட வரைகுடை எடுத்தவன்⋆
    நிலவிய இடம் தடம் ஆர்⋆
வரை வளம் திகழ் மதகரி மருப்பொடு⋆
    மலை வளர் அகில் உந்தித்⋆
திரை கொணர்ந்தணை செழுநதி வயல் புகு⋆
    திருவயிந்திர புரமே (8)

வேல்கொள் கைத்தலத்தரசர் வெம் போரினில்⋆
    விசயனுக்காய்⋆ மணித்தேர்
கோல்கொள் கைத்தலத்தெந்தை பெம்மான் இடம்⋆
    குலவு தண் வரைச் சாரல்⋆
கால்கொள் கண் கொடிக் கை எழக்⋆ கமுகிளம்
    பாளைகள் கமழ் சாரல்⋆
சேல்கள் பாய் தரு செழு நதி வயல் புகு⋆
    திருவயிந்திர புரமே (9)

‡மூவர் ஆகிய ஒருவனை⋆ மூவுல-
    குண்டுமிழ்ந்தளந்தானை⋆
தேவர் தானவர் சென்று சென்றிறைஞ்ச⋆ தண்
    திருவயிந்திர புரத்து⋆
மேவு சோதியை வேல் வலவன்⋆ கலி-
    கன்றி விரித்துரைத்த⋆
பாவு தண் தமிழ் பத்திவை பாடிடப்⋆
    பாவங்கள் பயிலாவே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com